1981 எப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு முழுப் பாதுகாப்பு உண்டு. அதுபற்றி நான் தீர்ப்புக் கொடுத்து விட்டேன். என் தீர்ப்புக்கு உறுப்பினர்கள் கட்டுப்பட்டு செயல்படுவதுதான் அவையை முறையாக நடத்திச் செல்ல உதவும். நான் சொன்னபடி எழுதிக் கொடுங்கள். இங்கே அந்தப் பிரச்னையைத் திரும்பவும் எழுப்ப அனுமதியில்லை.

திரு. ரா. உமாநாத்: எல்லாப் பிரச்சினைகளையும் எழுதிக் கொடுக்கச் சொல்லுகிறீர்களா? எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. நாங்கள் வெளியேறுகிறோம்.

(அகில இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி, அகில இந்திய பார்வேர்ட் பிளாக் கட்சி, ஆகியவற்றின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

4. கவன ஈர்ப்புகள்.

அ. கோவை மாவட்டம் சிறுமுகை "சவுத் இந்தியா விஸ்கோஸ்"-லிருந்து வெளியேறும் கழிவு நீரை பவானி ஆற்றில் கலக்க விடுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோவை மாவட்டம் சிறுமுகையிலுள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீர் பவானி ஆற்றில் விடப்படுவதால் பல்வேறு வியாதிகள் உண்டாவது குறித்து திருவாளர்கள் கு. அ. செங்கோட்டையன், ச. பாலகிருஷ்ணன், ஆர். ரங்கசாமி மற்றும் துரை ராமசாமி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "கோவை மாவட்டம் சிறுமுகையிலுள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுநீர் பவானி ஆற்றில் விடப்படுவதால் பல்வேறு வியாதிகள் உண்டாவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

கோவை மாவட்டம் சிறுமுகையிலுள்ள திருவாளர்கள் சவுத் இந்தியா விஸ்கோஸ் லிமிடெட், ரயான், கார்பன்-டை சல்பேட், செயற்கை நூல், கந்தக அமிலம் முதலிய பொருட்களை தயாரிக்கின்றன. இத்தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 110 லட்சம் கேலன் கழிவு நீரை வெளியேற்றுகிறது.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1981 ஏப்ரல் 25

இத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால், பவானி ஆற்றின் நீர் கெட்டு அதனால் மக்கள் வியாதியால் அவதியுறுகிறார்கள் என்ற தகவல் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. இத்தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரை தூய்மைப்படுத்த வேண்டிய எல்லா ஏற்பாடுகளை யும் செய்யுமாறு பொது சுகாதார இயக்குநர் இத்தொழிற்சாலையை கேட்டுள் ளார். இத் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீரில் ஒரு லிட்ட ருக்கு 800 முதல் 1200 மி. கிராம் வரை பயோகெமிக்கல் ஆக்சிஜன் காணப் படுகிறது. கழிவு நீரை தூய்மைப்படுத்தும் எல்லா நடவடிக்கைகளும் எடுக் கப்பட்டு வருகின்றன என்றும் கழிவு நீரை தூய்மைப்படுத்தும் பரிசோதனை கள் நடைபெறுகின்றன என்றும் கழிவு நீர் முற்றிலும் தூய்மையாக்கும் பணி இன்னும் சிறிது காலத்தில் முடிவுபெறும் என்றும் இத்தொழிற்சாலை கூறி யுள்ளது

கழிவு நீரைத் தூய்மைப்படுத்த அதை பவானி ஆற்றில் விடும் வகையில் சிறந்த அளவிற்கு மாற்றும் பணிகளை படிப்படியாக விரைவில் முடிக்க வேண்டும் என்று பொது சுகாதார இயக்குநர் இத் தொழிற்சாலையை கேட்டுக் கொண்டும் மேலும் கீழ்க்கண்ட நிபந்தனைகளை விதித்துள்ளார்.

(1) கழிவு நீரைத் தூய்மைப்படுத்துவதற்கான காலவரை 1981-க்கு மேல் நீடிக்கப்படமாட்டாது.

(2) கழிவு நீரைத் தூய்மைப்படுத்தும் பணி முடிக்கப் பெறுவதற்கு முன்பு இத் தொழிற்சாலையின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தக் கூடாது. இத் தொழிற்சாலை கழிவு நீரைத் தூய்மைப்படுத்தும் நிலையத்தை 28—3—1981 கட்ட தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இதனால் இத் தொழிற்சாலையில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தூய்மைப்படுத்தப்பட்டு வெளியேற்றப் படும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர் களே, கழிவு நீரைத் தூய்மைப்படுத்துவதற்கு பரிசோதனை நடைபெறுகின்றன என்றும் கழிவு நீர் முற்றிலும் இன்னும் சிறிது காலத்தில் முடிவு பெறும் என்றும் இந்தத் தொழிற்சாலை கூறுகிறது என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே அந்த பகுதியிலே இருக்கிற, ஆற்றோரப் பகுதியிலே இருக்கிற மக்கள் இந்த தண்ணீரை அருந்துவதால் பல்வேறு நோய் ஏற்படுகிறது. அந்த மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே கழிவு நீரை சரி செய்வதற்கு வெகு விரை விலே நடவடிக்கை எடுக்கப்பட்டு புவானி ஆற்றிலே விழாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 25] [டாக்டர் எச். வி. ஹண்டே]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 28—3—1981 அன்று அதற்காக ஒரு treatment. Effluent treatment plant இந்தக் கழிவு நீரைச் சுத்தப்படுத்தக்கூடிய ஒரு இயந்திரத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் They have commissioned on 28th அதுமட்டுமல்லாமல் நாம் இங்கே Director of Public Health authorities மூலமாக திட்டவட்டமாக அந்தக் கம்பெனிக்கு சொல்லியிருக்கிறோம். நீங்கள் அந்தக் கழிவு நீரை நல்ல வகையிலே சுத்தப்படுத்தாமல் இந்தத் தொழிற்சாலையை நடத்திக்கொண்டு போக வேண்டுமென்று நினைத்தால் அது முடியாத காரியம். உடனடியாக அதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். Expansion விஸ்தரிப்புக்குக்கூட இந்த ஏற்பாட்டுக்கு பிறகுதான் உங்களுக்கு அனுமதி தர முடியும் என்றுகூட நாம் சொல்லி இருக்கிறோம்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாற்றுத் தலைவர் அவர்களே, விஸ்தரிப்பு ஏற்படுகிற வரையில் அந்த கழிவு நீரை விடக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் அந்த தொழிற்சாலைக்கு உத்தரவிட்டிருப்பதாக சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலையிலே இருந்து போடப்பட்ட அறிக்கையில் இன்னும் சில காலத்திலே அந்த கழிவு நீரை விடுகிற அந்த முறையை தொழிற்சாலையில் இருக்கிறவர்கள் அதைக் கட்டுப்படுத்த முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதுவரையில் அந்தக் கழிவு நீரால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு உதவி செய்கிற வகையில் அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாற்றுத் தலைவர் அவர்களே, Effluent என்னென்ன அதிலே இருக்கிறது என்றும், தவறான பொருள்கள் poisonous material எனபதற்கு நாம் அதை பரிசோதனை செய்து Bio-chemical oxygen எண்ணூறிலே பிருந்து 1800 மிலிகிராம் per litre அதிலே இருந்து கண்டு பிடித்து இருக்கிறோம். அதற்கு பிறகு அந்த தண்ணீரிலே வியாதி வராது என்ற ஒரு முடிவும் அங்கே டி. பி. எச். லே இருந்து சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் கூட எந்தவிதமான that is called minimum level of toxity என்றெல்லாம் சில விவரங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் பார்த்து தண்ணீர் அப்போதைக்கப்போது sample எடுத்துக் கொண்டு நாம் அதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் ஏறத்தாழ 10 நாட்கள் கழிவு நீர் விடப்படுமேயானால் தானாகவே அந்த toxity குறைந்துவிடும் என்று கூட அங்கே இருக்கிற டி.எச்.ஓ. தாக்கீது அனுப்பியிருக்கிறார்.